
உ

சிவமயம்



நயினாதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்வேளாண் குலத்திலகம்

அமரர்

# திருவாட்டி சிவகாமிப்பிள்ளை விசுவலிங்கம் (பகீரதி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

ப்ரீதம்

24.07.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நயினாதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,

கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்வேளாண் குலத்திலகம்

அமரர்

# திருவாட்டி சிவகாமிப்பிள்ளை விசுவலிங்கம்


**(பகீரதி)**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# பகீரதம்

**24.01.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

"தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை"

எங்களை ஈன்றெடுத்த குல தெய்வமாய்

அன்பின் உறைவிடமாய்

பண்போடு எமையெலாம் நல்லாற்றுப்படுத்திய

எமது தாயை இழந்து நிற்கும் இவ்வேளையில்

நாம் நினைவு மலர் வெளியிடுவது என்பது

அவர் பணிக்கீடாகாது.

இருந்தும் அவரது இறுதி நினைவுகளை

மீட்டுக்கொள்வதற்கான ஓர் பதிவைப்

பேணிக்காப்பது அவசியம் எனவே

இம்மலரினை அவரது

பாதார விந்தங்களைத் தொழுது

அவர் பாதம் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

அன்புரிமையுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயேயாகி வளர்த்தனை போற்றி



அன்னையின் மடியில்
24.09.1930

ஆண்டவன் அடியில்
31.12.2011

அமரர்

# திருவாட்டி சிவகாமிப்பிள்ளை விசுவலிங்கம்

( பகீரதி )

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு முடிவாகும் ஆனசனி மார்கழியிலே
காண் பூர்வபக்க ஸப்தமி திதிதனில் - நீண்டபுகழ்
விசுவலிங்கம் அன்பு மனை பகீரதி சென்றடைந்தாள்
ஈசனடி வல்லபெரும் கர்மாவை நீத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"



அமரர்

# திருவாளர் சின்னையா விசுவலிங்கம்

அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாதவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

## தேவாரம்

மங்கயர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா றென்றான்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே.

நாயேன் பல நாளு நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாத்திரிந்தெய்த்தேன் பெறலாகா வருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்
- துறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லே னெலாமே.

## திருவாசகம்

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர வென் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடை வாள் உமைகோன் அடி
யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர் நேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

செறி தருமுயிர் தோறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவிய
அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய
இறைவி தன் மலரடி யிறைஞ்சியேத்துவாம்.

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.


## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமிந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம் பலவர்
அடிசார்ந்து நாமுய்யவேண்டுமென் றேயறி வாரில்லையே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகல கலாவல்லி மாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தாண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற் சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக் கென்று கூடுங்கொ
லோவுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



<u>அபிராமிப் பட்டர் அருளிய</u>

# அபிராமி அந்தாதி

### கள்ளவாரணப் பிள்ளையார் காப்பு

**தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத் (து )உமைமைந்த னேஉல (கு) ஏழும் பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.**

### நூல்

**ஞானமும் நல் வித்தையும் பெற**

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே ! 01

**பிரிந்தவர் ஒன்று சேர**

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பணிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ (து)அறிந்தனமே 02

**குடும்பக்கவலையிலிருந்து விடுபட**

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயர்பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே 04

### மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே 05

### மந்திர சித்தி பெற

சென்னிய(து)உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடிய முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே 06

### மலையென வருந்துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய் சிந்துரானன சுந்தரியே 07

### பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள் என் கருத்தனவே 08

### அனைத்தும் வசமாக

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின் பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம் மேவந்தென் முன் நிற்கவே 09

### மோட்ச சாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே உமையே இமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்வாழ்க்கையில் இன்பம் பெற**

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம் எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

**தியானத்தில் நிலை பெற**

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து) என் அம் மேபுவி ஏழையும் பூத்தவளே. 12

**வைராக்கிய நிலை எய்த**

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றொர்தேய்வம் வந்திப்பதே. 13

**தலைமை பெற**

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே 14

**பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற**

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்செல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

**முக்காலமும் உணரும் திறன் உண்டாக**

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு) அள வான(து) அதிசயமே. 16

**கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய**

அதிசய மான வடி(வு) உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனை சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### மரணபயம் நீங்க

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள்திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

#### பேரின்ப நிலையடைய

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

#### வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

#### அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள் உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

#### இனிப்பிறவா நெறி அடைய

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து)
[ஆண்டுகொள்ளே 22

#### எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல் லா(து) அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) [தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23

#### நோய்கள் விலக

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைத்தகாரியம் நிறைவேற**

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே 25

**செல்வாக்கும் சொல்வாக்கும் பெருக**

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அளித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம் நாறும் நின்தாள் இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26

**மனநோய் அகல**

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத் (து) அழுக்கைஎல் லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

**இம்மை மறுமை இன்பங்கள் அடைய**

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க் கேஅழி யாஅரசும
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே 28

**எல்லா சித்திகளும் அடைய**

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே 29

**விபத்து ஏற்படாமல் இருக்க**

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து) அல்லவென்கை
நன்றே உனக்(கு)இனிநான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே. 30

**மறுமையில் இன்பம் உண்டாக**

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துர்மரணம் வராமலிருக்க

ஆசைக்கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல்பட இருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. 32

### இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைகக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல் என் பாய் அத்தர் சித்தம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே (எல்லாம்
உழைக்கும்பொழு(து) உன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே 33

### சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடி யாருக்கு வான் உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

### திருமணம் நிறைவேற

திங்கட் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங்கக் கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே. 35

### பழைய வினைகள் வலிமை அழிய

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயா தனத்(து) அம்பிகையே. 36

### நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே. 37

### வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக்கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகள் உண்(டு) : அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான் பங்கில் வாள்நுதலே. 39

### பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப்பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்(கு) எண்ணியஎண்ணம் அன்றோ? முன்செய் புண்ணியமே. 40

### நல்லடியார் நட்புப்பெற

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்த தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேய்பத்ம பாதம் பதித்திடவே 41

### உலகினை வசப்படுத்த

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

### தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே. 43

### பிரிவுணர்ச்சி அகல

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறை வியும் ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு செய்தே 44

### உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே 46

### யோக நிலை அடைய

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடு வே கிடந்து சுடர்கின்றதே 47

### உடல்பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

### மரணத்துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்து அரிவையர் சூழவந்(து) அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்து இசைவடி வாய்நின்ற நாயகியே. 49

### அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

### மோகம் நீங்க

அரணம் பொருள் என்று அருள் ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய் தார் இந்த வையகத்தே 51

### பெருஞ் செல்வம் அடைய

வையம் துரகம் மதகரி யாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள் அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யுணர்வு நீங்க

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53

### கடன்தீர

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

### மோன நிலை எய்த

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே. 55

### யாவரும் வசமாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

### வறுமை ஒழிய

ஐயன் அனந்த படியிரு நாழிகோண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒடுவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மேய்யருளே. 57

### மன அமைதி பெற

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. 58

### பிள்ளைகள் நல்லவர்களாக வளர

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார் அடி யார்பெற்ற பாலரையே. 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்யுணர்வு பெற**

பாலினும் சொல் இனி யாப்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்க நின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே. 60

**மாயையை வெல்ல**

நாயேனை யும் இங்(கு) ஒரு பொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னைஉள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே. 61

**எத்தகைய அச்சமும் அகல**

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும் எப் போதும் என் சிந்தையதே. 62

**அறிவு தெளிவோடு இருக்க**

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே 63

**பக்தி பெருக**

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண்டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே 64

**ஆண்மகப்பேறு அடைய**

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே 65

**கவிஞராக**

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்து தொழுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

### நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே 68

### சகல சௌபாக்கியங்களும் அடைய

தனந்தரும் கல்வி தரும்ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே. 69

### நுண்கலைகளில் சித்தி பெற

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்பளிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே 70

### மனக்குறைகள் தீர

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்றநெஞ்சேயிரங் கேலுனக்(கு) என்குறையே. 71

### பிறவிப்பிணி தீர

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன் இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72

### குழந்தைப்பேறு உண்டாக

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வைரவர் ஏத்தும் பொழு(து) எமக்கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிலில் மேம்மை அடைய**

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

**விதியை வெல்ல**

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75

**தனக்கு உரிமையானதைப் பெற**

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை (மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பைரவியே. 76

**பகை அச்சம் நீங்க**

பைரவி பஞ்சமி பாசாங் குசபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள்செப்புவரே. 77

**சகல செல்வங்களையும் அடைய**

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே 78

**கட்டுகளில் இருந்து விடுபட**

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே 79

**பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட**

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்னடத்தை உண்டாக**

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள்ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என் கண்நீவைத்த பேரளியே 81

**மன ஒருமைப்பாடு அடைய**

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82

**ஏவலர் பலர் உண்டாக**

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்க மலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர் எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

**சங்கடங்கள் தீர**

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

**துன்பங்கள் நீங்க**

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85

**ஆயுத பயம் நீங்க**

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86

**செயற்கரிய செய்து புகழ்பெற**

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தாழ்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாலும் பராபரையே. 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் அம்பிகை அருள்பெற

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யாள்இடப் பாகம் சிறந்தவளே 88

யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே 89

கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே. 90

அரசாங்கச் செயலில் வெற்றி பெற

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. 91

மனநிலை பக்குவமடைய

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன் அவர் போனவழியும் செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

உள்ளத்தில் ஒளியுண்டாக

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகில்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

மனநிலை தூய்மையாக

விரும்பித் தொழும் அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபி ராமி சமயம்நன்றே. 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன உறுதி பெற**

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அழித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே. 95

**எங்கும் பெருமை பெற**

கோமள வல்லியை அல்லியந் தாமரைக்கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே 96

**புகழும் அறமும் வளர**

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

**வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற**

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறி யாமடப் பூங்குயிலே 98

**அருள் உணர்வு வளர**

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்று இமவான் அளித்த கனங்குழையே 99

**அம்பிகையை மனத்தில் காண**

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே. 100

**நூற் பயன்**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு)ஒருதீங்கில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு அர்ச்சனை



திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறி வொளியாய் மிளர்ந்தாய் போற்றி
மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி
வரம்பி லின்பமாய் வளர்ந்தாய் போற்றி
வானமாய் அருள்மலை பொழிந்தாய் போற்றி
ஈரேழுலகம் ஈன்றாய் போற்றி
பிறர்வயமாகப் பெரியாய் போற்றி
பேரின்பப் பெருக்கமாய்ப் பொலிந்தாய் போற்றி
பொருட்கடலாம் பொருளே போற்றி
பெரியோர்க் கெல்லாம் பெரியோய் போற்றி
மூவுலகுந்ததொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்தம் அறிவொளி விளக்கே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சிவகாமிப்பிள்ளை விசுவலிங்கம்

அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

(அகவற்பா)

ஈழ வள நாட்டில் இலங்கு பெரும் பதி
நயினை தன்னிலே நவிலுமோர் பெருங்குடி
ஊர்காவற்றுறை யெனும் துறைமுகம் தனில்
ஊரார் பசி ஆற்ற இறங்கு துறைமுகம் தனில்
பாராரும் புகழ் போற்ற அமுத சுரபியாக
பார்புகழும் உணவகத்தின் முன்னாள் தலைவராக
சின்னத்தம்பியெனும் அன்பு சேர் பெரியவர்
பாசமும் கொடையும் விளங்கிய
பூப் பறித்திறைவனைப் பொழுதெலாம் போற்றிடும்
வள்ளியம்மை யென்னும் மங்கையை மணந்தே
இன்புற்று இனிதே இணைந்து மகிழ்ந்தனர்.
வாழ்ந்ததோர் வாழ்வினில் வாய்த்திட்ட மக்களில்
செப்புமோர் கொடை வள்ளல் முத்தவளாம் **பகீரதி** தனை,
ஆண்டுகள் பல உருண்டு ஓடின அந்நாளிலே
தன்னிகரில்லாத் தலைவனைத் தேடுகையில்
நயினையில் வந்துதித்த அம்பலவாணர், சின்னையாவாம்
மங்களநாயகத்தின் வர்த்தகத்தில் வித்தகனாம்
கொடை வள்ளலாம் சொல்லிற் செல்வனாம்
கொழும்பு மாநகரத்தைச் சொந்த இடமாக்கி
தலைவணங்கா இளையமகனாம் **விஸ்வலிங்கத்தை**
தன் துணையாக அடைந்து சீரும் சிறப்புடனும்
வாழ்ந்த நற் சீமாட்டியாம் **பகீரதி**
தன் குடும்பத்தின் முதற் குத்துவிளக்காக
திகழ்ந்தாள் அந்நாளிலே!
தான் புகுந்த குடும்பத்தினருக்கும்
நற்பணி செய்து இன்புற்று வாழ்ந்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பின்னால் பிறந்திட்ட ஆண் மகனாம்
கந்தசாமியென்னும் பாசமிகு தம்பியை
கண்டு இன்புற்று இருக்கையில்
வளர்பிறை போல தம்பி வளர்கையில்
அன்னாரின் துணையாகச் சீலம் மிக்கவளாம்
செல்லம்மா வென்னும் மணியை
மைத்துனியாகக் கண்டு மகிழ்ந்திருக்கையில்,
தனது மூத்த நங்கையாம் குலவும் நல்லாள்
இனிய குணத்தினாள் எம்மையெல்லாம்
விட்டுப்பிரிந்த பவானியென்னும் பூபதியைக்
கண்டு மகிழ்ந்திருந்தா!
அற்புத குணங்களையும் அன்பின்
ஊற்றையும் கொண்ட நயினை - பிரபல
வர்த்தகரும் காலனின் கயிற்றில்
அகப்பட்டுக் கொண்டவருமான
கந்தசாமியென்னும் நன் மண வளானை
ஏற்று இன்புற்று வாழ்ந்தா!

பாச மிகுந்த அன்பினால் அரவணைத்து
ஆறுதல் அளிக்கும் காலம் சென்ற தம்பியாம்
சந்திரசேகரம் என்னும் நாமங் கொண்ட - இராசனாம்
பலகலையும் கற்று இலங்கை
பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியாகத் திகழ்ந்தவராம்
தனது துணைவியாக முன்னாள் யாழ். கொழும்பு
தொழில் நுட்பக்கல்லூரியின் விரிவுரையாளராம்
செல்வராணியை ஏற்று வாழ்வை
இனிதாக நடத்திய அன்பு இராசனாம்!

இளையவளாக வந்துதித்த கேதார கௌரியாம்
அன்பு, பாசம், கருணை, அரவணைப்பு
அத்தனைக்கும் தன்னிகரில்லா தலைவியாம்- கௌரி
தனது மணவாளனாக முன்னாள் கொழும்பு கப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகப் பணியாளராம் குமரையா அவர்களை
மணந்து இன்புற்றுள்ளார்.
இளையோனாய் வந்துதித்த தம்பியாம்
தனபாலசிங்க மென்னும் சின்னமணியாம்
இரவு, பகல் பாராது நற்பணிகள் பல செய்யும்
மக்கள் சேவையாளனாம் நயினையம்பதியிலே
கப்பல் துறைமுகத்திலே கப்பல் சேவையினை
பண்ணெடுங்காலமாக நடத்திவரும் அன்புச் சகோதரனாம்
இவர் தன் வாழ்வுதனில் வந்து கரம்பிடித்த
வசந்திராதேவி யென்னும் வசந்தியாம்
நயினை அம்மன் ஆலய நிர்வாகியாகவும்
திகழ்ந்து இல்லறத்தை நல்லறமாக்கி
இன்புற்று வாழும் துணைவியாம்!
சகோதரர் ஐவராய்ச் சூழ்ந்திடக் களித்து
மைத்துனர், மைத்துனிமார்களையும் கண்டு களித்து
இவ்வுலகை விட்டு நீங்கிச் சென்றார்.

தனக்கெனக் குடும்பமாக இன்புற்று வாழ்கையில்
தரணிதனில் மூத்தவளாய் வந்துதித்த மல்லிகா என்னும்
மல்லிகை மலரை ஈன்றனள் முதலில்
அவர்க்கெனத் துணையாக சாவகச்சேரியில்
முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க
வங்கி லிகிதராம் தர்மலிங்கத்தை "தறுமு"
என்று கூறிடும் அன்பு மருமகனாக்கி - கொண்டார்
பலமொழி கற்றுப் பலமொழி பேசி
இனமத பேதமின்றி அன்புடன் பழகி
தனக்கெனத் துணையைத் தேடாது
தனிமையாகத் தன் வாழ்க்கையை நடத்தி
ஊரார்க்கு உதவி செய்யும் உத்தமனாம்
ஜெயராஜசிங்கம் எனும் ஜெயமாம்
உன் பிறந்த நாளினிலே
என் உயிரைக் காலன் எடுத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் ஆசிரியையாம் சுசீலாவை
தனது இரண்டாவது மகளாக ஈன்றுவந்தாள்
குடும்பச் சுமை தாங்கியாகச் சுமைதனைச் சுமந்துநின்றாள்
தனக்கென வாழாது பிறர் நலன் கருதி வாழும்
இவள் தன்னில் வாழ்க்கையில் இறைவன்
விளையாடி நின்றான் இவளது
வாழ்வு தனில் யாழ். வர்த்தகத்துறை
பஞ்சலிங்கம் என்னும் நாமத்தினைக்
கொண்ட பஞ்சன் என்பவரைத்
திருமணம் செய்து வாழ்ந்து வருகையில்
வாழ்வு தனில் மாற்றங்கள் நிகழ்ந்தன!
ஆறறிவு படைத்த வீர மிக்கவனாகவும்
ஆறு மொழிகளில் ஆற்றல் படைத்தவனாம்
சாந்த சொரூபன் என்னும் சாந்தனை
தனது இரண்டாவது மகனாக
கண்டு மகிழ்ந்தார் இவரின்
வாழ்க்கைத் துணைவியாம்
பலநாடு சென்று பல மொழிபேசி
இராஜேஸ்வரி என்னும் அம்மன்
பெயர் சூடிய சுகுணாவை
திருமணம் செய்து இனிதே
தனது மருமகளாக்கி மகிழ்ந்தார்.

தியாகம், சீலம், செய்தொழில், நேர்த்தி
அனைத்தும் ஒருங்கே அமையப்
பெற்ற செல்வமகனாம் இரவீந்திரன்
என்னும் நாமத்தையுடைய ரவி
பத்துமாதம் சுமந்து பகலிரவாய்
பாடுபட்டு வளர்த்த தன் அன்னையை
அன்பு பாசத்துடன் அவள் தன்
கழல்களை கழுவி இன்புற்று மகிழ்ந்த - மைந்தன்
இவர்க் கெனத் துணையைத் தேடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினையாம் பதியில் வந்துதித்த
உத்தமியாம் நாகேஸ்வரி தாய் தன்
வடிவத்துடன் நாமம் பெற்ற ஈசாவை
தனது மருமகளாக்கி ஈசனும், ஈசாவுமாக
கண்டு மகிழ்ந்தா மனம் சலிக்காது
இன்முகம் காட்டி இன்புற்று மாமியாருக்குப்
பணி விடை செய்து எல்லோர்
நெஞ்சினிலும் இடம் பிடித்த உத்தமியே!

ரவிக்குப் பின்னால் பிறந்த மகளாம்
சிறியென்னும் நாமத்தைக் கொண்ட
அபிராமியென்னும் பெயரையுடையாள்
வர்த்தகத்துறையில் ஆர்வமிக்கவளாம்
தனக்கென வர்த்தகரான இராஜராஜன் - என்னும்
இராஜனை மணந்து நலமுடன் வாழ்பவளாம்
இளையவளாம் அமைதி, சாந்தம், அடக்கம்
அத்தனையும் கொண்ட மணிமேகலாவாம்
பெயரில் மட்டும் மணியல்ல
பேச்சிலும் அவள் குணமணியாம்
வாழ்வு தனை அன்பினால் அமைத்து
வைகுந்த வாசன் என்னும் வாசனை - மணந்து
வாசனையுடன் இல்லறம்
இனிதே கண்டு மகிழ்ந்தாள்
கள்ளம் கபடமறியா வயதினிலே
காலனிடம் சென்றாள் நந்தினி

மூத்த மகளாம் மல்லிகாவின் குழந்தைகளாம்
பிரபாகரன்(பிரபா) கலைத்துறைப் பட்டதாரி,
பிரேமினா திருநெல்வேலி தனியார் வைத்தியசாலைத் தாதி,
மிதுனா யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்,
பிரதீப் கொழும்பு பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பயிற்சிப் பயிலுநர்
சுசீலாவின் பிள்ளைகளாம் கார்த்தீபன் (தீபன்) கொலன்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச இணையத்தளத்தில் வெளியான செய்தி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்துறை நீதிபதி பயிலுநர், கார்மேகன் (மேகன்)
கொலன்ட் கணினித்துறை கல்வி, சாந்தனின்
செல்வங்களாம் ஜனார்த்தன் (ஜனா) கொழும்பு
உயர்தர விஞ்ஞானத்துறை கல்வி,
ஜமுனா கொழும்பு கணினித்துறை பிரித்தானியா,
பிரம்பன் வர்த்தகம் இலங்கை,
ரவியின் ஆசை மகளாம் கௌசிகா யாழ். இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவி, அபிராமி (சிறி-அபி) யின் அன்புச் செல்வனாம்
இலண்டன் பொறியியலாளர், மணியின்
அன்புமகளாம் சகானா ஜேர்மனி இன்ரநெசனல்
மனேஜ்மன் பயிலுநர், வசுமதி (மதி) ஜெயகுசலன்
கொலண்ட், எலற்றோனிக்துறைப் பொறியியலாளர்,
ஜமுனா நிதர்சன் பிரித்தானியா வர்த்தகம் ஆகியோரின்
பாசமிகு பாட்டியும் ஆவர்.
வசுஜன் கொலண்ட், ஜீவன் கொலண்ட், மதுஜன் கொலண்ட்,
தனோச் பிரித்தானியா ஆகியோரின் பாசமிகு
பூட்டியுமாவார்.

இனிய சீர் மாது ஸப்தமி நன்னாளில் விடுதலையாகி இறைவன் கழல்தனை அமைதியிலொடுங்கினார்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

ஆக்கம்:-
மகள் சுசீலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

உயிர் வாழ மல்லிகா நாமம் செய்தீர்கள்
உயிர் துடிப்புக்கு ஜெயம் நாமம் சூட்டினீர்கள்
குடும்பச் சுமை தாங்க சுசீலாவை ஈன்றீர்களே!
வீரம் ஓங்க பாரினில் சாந்தனைத் தந்தீர்கள்
பயிர் காக்க தரணியில் ரவியை அளித்தீர்களே!
தண்ணங்கள் மிளிர சிறி (அபிராமி) யை ஈன்றீரோ!
அன்புக்காக ஏங்க மணியை தந்த தாயே
சிறுவயதிலே காலனிடம் சென்றாள் நந்தினி
கயிறெறிந்துன்னை காலன் அவன் கொண்டு சென்றானே.

## சகோதரர் புலம்பல்

ஒருதாய் வயிறுதித்து
ஒரு கலத்து உணவருந்தி
பெரும்பாசம் தனைச் சுமந்த
பெரும் பேறே போனீரோ
குருதியுனுள் குதித்த பெருங்
குருடனை நாம் விரட்டிடவே
பெரும்பாடு பட்டோமே
அக்காவே இது தகுமோ.

## மருமக்கள் புலம்பல்

மட்டிலா மகிழ்ச்சி பொங்க
மானிலத்தில் வந்துதித்தீர்
திட்டுவார் யாரும் என்றால்
தீ தெனத் திருத்துவீரே
கருணை அன்பு கொண்ட - உங்களை
காலன் கட்டி இழுத்து எட்டவே
கொண்டு சென்றாரோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன், பேர்த்திமார், பூட்டன்மார் புலம்பல்

மங்கள விளக்கேற்றி
        மலர்களைத் தூவி நாளும்
எங்களின் பேரன், பேர்த்திகள், பூட்டன்
        என்றும் நலமுடன் வாழவேண்டி
எங்களை விட்டு மறைந்தாயோ
        எப்பொழுது காண்போம் இனி
அங்கமே பதறு பாட்டி, பூட்டி!
        அம்மனும் கைவிட்டாவோ?

## பெறாமக்கள், பெறா மருமக்கள் புலம்பல்

ஓடிவரும் எமைத்தழுவி உச்சிமோந்து
உறவு சொல்லித் தாளீன்ற மக்களைப் போலவே
தேடி நல் ஒழுக்க நெறி அன்பு காட்டி
தித்திக்கும் திண்பண்டங்கள் யாவும் நல்கி
அன்புடனே அரவணைத்து ஆசி பலகூறி
கோடி நன்மை பெறுகவெனக் கூறி நின்ற
பெரியம்மா, பெரியமாமி இனி எங்கே
உங்களைத் தேடிப்பார்ப்போம்.

## மைத்துனர், மைத்துனியர் புலம்பல்

மென்மையாம் மனத்துளாரே!
        மேன்மையாம் குணத்துளாரே
தன்னை ஓர் பொருட்டாய் எண்ணாத்
        தத்துவ மைத்துனியே
உன்னுடன் பிறப்பே என்றே
        உறவினால் எம்மைச் சேர்க்கும்
அன்புரு மச்சாள் எங்கே?
        அலறுவோம் விதியை நொந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்

இன்பத்தில் பங்கு கொண்டு
இனிதிட வாழ்த்துச் சொல்வாய்
துன்பத்தில் எம்மைக் காணில்
துடித்து நீ பணிகள் செய்வாய்
அன்பிற்கோர் உருவம் நீ யென்று
அனைத்துப் பல ஆறுதல் அளிப்பாய்
இன்றெமைப் பிரிந்திட்டாயோ
இனி எப்போ காண்போம் மண்ணில்!

**மகள்**
**சுசீலா**

## வாழ்க்கை

**வாழ்க்கை**

- ஒரு சவால், அதனைச் சிந்தியுங்கள்
- ஒரு பரிசு, அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
- ஒரு சாகசப்பயணம், அதனை மேற்கொள்ளுங்கள்
- ஒரு சோகம், அதனை கடந்து வாருங்கள்
- ஒரு துயரம், அதனைத் தாங்கிக் கொள்ளுங்கள்
- ஒரு கடமை, அதனை நிறைவேற்றுங்கள்
- ஒரு விளையாட்டு, அதனைக் கண்டறியுங்கள்
- ஒரு பாடல், அதனைப் பாடுங்கள்
- ஒரு சந்தர்ப்பம், அதனைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்
- ஒரு பயணம், அதனைப் புகழுடன் முடித்துவிடுங்கள்
- ஒரு உறுதிமொழி, அதனை அனுபவியுங்கள்
- ஒரு காதல், அதனை அனுபவியுங்கள்
- ஒரு அழகு, அதனை ஆராதியுங்கள்
- ஒரு உணர்வு, அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
- ஒரு போராட்டம், அதனை எதிர்கொள்ளுங்கள்
- ஒரு குழப்பம், அதனை விடை காணுங்கள்
- ஒரு இலக்கு, அதனை எட்டிப்பிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் வல்ல நாகபூஷணித் தாயைத் தொழுது பணிவோம்

எல்லோருக்கும் மரணம் இருக்கிறது என்பது நாம் பிறக்கும்போதே தெரிந்த விடயம். ஆனால் எப்போ என்பது தெரியாது. தெரிந்துவிட்டால் நாம் தினம் தினம் செத்துக் கொண்டிருப்போம்; அதனாலேயே செத்துவிடுவோம். அதே போலத்தான் 'மறதி'யும். அதுவும் நினைவிலிருக்குமானால் கோபம், எல்லாம் திரண்டு, ஞாபகத்திலிருந்து கோரக் கொலைகள் நடந்து கொண்டிருக்கும், மன்னிக்கும் மனப் பாங்கு எம்மிடமிருக்குமாயின் நாம் எல்லாம் மானிடத் தெய்வமாகிவிடுவோம். குறை நீக்கி, நிறைவு கண்டு போற்றிப் பாராட்டும் பக்குவமடைந்து விட்டால் உலகத்தில் சமாதானமும் சாந்தியும் மிளிருமல்லவா?

அக்காவின் மறைவு ஆளில்லையென்ற குறைவுடன் தானிருக்கின்றது. அவரைப் பொறுத்தவரை பழுத்த வெள்ளரிப்பழம் முற்றியதும் தானாகவே கொடியுடனான காம்பினை விடுவதுபோல் ஆனவொன்றே.

ஓம் த்ரியம்பகம் யஜா மகே சுகந்திம்
புஷ்டிவர்த்தனாம் உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்தியோர் முஷீய மாம்ருதாத்.
என ம்ருத்யுஞ்ஜய மந்திரம் ஆன்மாவின்
பரிபக்குவநிலையை இயம்புகிறது.
நாமும் உச்சரித்து அமைதிபெறுவோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அகிலாண்டகோடி ஈன்ற அன்னை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி

நயினாதீவு - 2


இ. சிவபாதசேகரம்
பணிஓய்வு அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளப்பூர்வமிக்க எமது நன்றிகள்

நயினாதீவு முதலாம் வட்டாரத்தினைப் பிறப்பிட மாகக் கொண்ட அமரர் திருவாட்டி சிவகாமிப்பிள்ளை (பகீரதி) விசுவலிங்கம் அவர்கள் **31.12.2011** சனிக்கிழமை காலமானார்.



அவரது பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்த அயலவர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி அழைப்புகள் மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் மலர் வளையம் வைத்தோருக்கும், உபசரித்தோருக்கும், இறுதி ஊர்வலத்திலும், அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வுகளிற் கலந்து கொண்டோருக்கும் எமது குடும்ப நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" குறள்.

நயினாதீவு.
24.01.2012.

**நன்றி**

இங்ஙனம்.
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவி

*அம்பலவாணர்

↓

*சின்னையா + * மங்களநாயகம்

- நல்லையா + சொர்ணாம்பாள்
- * விசுவலிங்கம்
- *வல்லிபுரம்
- *கமலாதேவி + *விசுவலிங்கம்
- பத்மாதேவி + பாலசிங்கம்
- *சிவகா
  (ப

---

- மல்லிகா + தர்மலிங்கம்
  - பிரபாகரன்
  - பிரேமினா
  - மிதுனா
  - பிரதீபன்
- ஜெயராஜசிங்கம்
- சுசீலா + பஞ்சலிங்கம் (ஹொலன்)
  - பார்த்தீபன்
  - வசுமதி + ஜெயகுசலன் (கொலண்)
    - வசுஜன் (கொலண்)
    - ஜீவன் (கொலண்)
    - மதுஷன் (கொலண்)
  - கார்மேகன்
- சாந்தசொரூபன் + இராஜேஸ்வரி
  - ஜனார்த்தன்
  - ஜமுனா (லண்டன்) + நிதர்சன்
    - தினோச்
  - பீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -விருட்சம்

*கட்டையர்

↓

*சின்னத்தம்பி + *வள்ளியம்மை

↓

- காமிப்பிள்ளை (பகீரதி)
- கந்தசாமி + செல்லம்மா
- *பவானி + *கந்தசாமி
- * சந்திரசேகரம் + செல்வராணி
- கேதாரகெளரி + குமரையா
- தனபாலசிங்கம் + வசந்தாதேவி

---

- ரவீந்திரன் + நாகேஸ்வரி → கெளசிகா
- அபிராமி + இராஜராசன் (லண்டன்) → தர்ஷசன் (லண்டன்)
- மணிமேகலை + வைகுந்தவாசன் (ஜேர்மனி) → சஷானா

*** அமரர்களைக் குறிக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org